FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 173 BNSS)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8313281

1. District : திருநெல்வேலி PS: காவல்நிலையம் Year: 2026 FIR No.: 12/2026 Date: 28.08.2026
மாவட்டம் ஆண்டு முத.அ. எண் நாள்

2. (i) Act சட்டம்: P.C Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்: 7, 7(A)

(ii) Act சட்டம்: Sections பிரிவுகள்:

(iii) Act சட்டம்: BNSS 2023 Sections பிரிவுகள்:

(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : Date from 27.08.2026 Date to :
குற்ற நிகழ்வு நாள் நாள் முதல் நாள் வரை

Time Period : Time from 15.15 hrs Time to : 22.00 hrs
நேர அளவு நேரம் முதல் நேரம் வரை

(b) Information Received at PS. Date : 28.08.2026 Time : 18.00 hrs
காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் நேரம்

(c) General Diary Reference : Entry No(s) 28.08.2026 Time : 18.15 hrs
பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் நேரம்

4. Type of Information : Written/ Oral / Electronic form : எழுத்து மூலமாக
தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக / மின்னணு வடிவம்

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: தென்காசி அலுவலகம், கோவையாக்கோவில், திருநெல்வேலி மாவட்டம் நகரம் 20 கி.மீ தெற்கு
குற்ற நிகழ்விடம் அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்

Beat Number : (b) Address :
முறைக் காவல் எண் முகவரி

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : S. முத்துராமலிங்கம் (b) Father's/ Husband's Name : சுந்தரவேல்
குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்

(c) Date / Year of Birth : 48/1978 (d) Nationality இந்தியர் (e) Passport No. :
நாள் / பிறந்த ஆண்டு நாட்டினம் வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்

Date of Issue : Place of Issue :
வழங்கப்பட்ட நாள் வழங்கப்பட்ட இடம்

(f) Occupation : (g) Address : மாவட்ட தலைமை அலுவலகம், திருநெல்வேலி மாவட்டம்,
தொழில் முகவரி திருநெல்வேலி மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
(தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) [illegible], 2. [illegible], 3. [illegible], 4. [illegible], 5. [illegible], 6. [illegible], 7. [illegible]

8. Reasons for delay in reporting by the complainant / Informant: [illegible], திருநெல்வேலி மாவட்டம்
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

- [illegible] -

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கிறேன். இன்று 28.08.2026 தேதி 18.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருக்கும்போது, இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், ஆய்வுக்குழு ஆய்வாளர் திரு.S.முத்துராமலிங்கம் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துபூர்வமான புகார் மனுவை பெற்று, புகார் மனுவில் ஊழல் தடுப்பு சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இருந்த காரணத்தினால் அந்த தகவலை சென்னை, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை தெற்கு சரக காவல் கண்காணிப்பாளர் அவர்களுக்கு தொலைபேசி வாயிலாக தகவல் தெரிவித்து அன்னாரின் அனுமதி பெற்று 28.08.2026-ம் தேதி 18.15 மணிக்கு சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.12/2026 u/s. 7, 7(A) of P.C Act 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 and sec.106 BNSS-2023 ன்படி வழக்கு

(தனித்தாள் இணைக்கப்பட்டுள்ளது)

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at Item No.2 registered the case and took up the investigation / directed ..... Rank ..... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.....on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ..... பதவி ..... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ..... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

28/8/26

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
28.08.2026 at 19.00 hrs

Name: பெயர் .....
Rank: நிலை ..... No. எண் .....
VAC, Sivagangai.

சிவகங்கை ஊ.த.க பிரிவு குற்ற எண்.12/2026 முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி -

பதிவு செய்தேன். புகார் மனுவின் விபரம் பின்வருமாறு, அனுப்புநர் S.முத்துராமலிங்கம், த/பெ.சக்திவேல், வருவாய் ஆய்வாளர், ஆய்வுக்குழு ஆய்வாளர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள், இராமநாதபுரம், பெறுநர் காவல் ஆய்வாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு, சிவகங்கை, நாள்: 28.08.2026, பொருள்: சிவகங்கை மாவட்டம் - காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் உள்ள வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட திடீர் இணை சோதனை சம்மந்தமாக நடவடிக்கை எடுக்கக் கோருதல் தொடர்பாக, பார்வை : இராமநாதபுரம், சிவகங்கை மற்றும் விருதுநகர் மாவட்டங்கள் ஆய்வுக்குழு ஆய்வாளர் அவர்களின் செயல்முறை நடவடிக்கைகள் நாள்:27.08.2026, 27.08.2026ம் தேதி சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவிலிருந்து தொடர்புகொண்டு, சிவகங்கை மாவட்டம், காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மூலம் மேற்கொள்ளப்படும், ஊராட்சி நிர்வாகத்திற்கு உண்டான செலவினங்கள் விடுவிப்பு செய்தல் மற்றும் ஊராட்சியில் புதியதாக கட்டிட்டங்களுக்கு கட்டிட வரைப்பட அனுமதி வழங்குதல் ஆகிய பணிகளுக்கு சம்மந்தப்பட்ட ஊராட்சி செயலாளர்களிடம் நேரடியாகவும், அலுவலகத்தில் பணிபுரியும் உதவியாளர் திரு.ஜெகதீஸ்குமார், கணிபொறி இயக்குநர் திரு.காளிதாஸ், திரு.சீனிவாசன் மற்றும் ஓட்டுநர் திரு.அங்குசாமி ஆகியோர்களது Phone pay / Google pay மூலமாகவும் லஞ்சம் கேட்டுப்பெறுவதாகவும் ரகசிய தகவல் உள்ளதாக தெரிவிக்கப்பட்டதன் பேரில், 27.08.2026-ஆம் தேதி 15.15 மணிக்கு காளையார்கோவில் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் அமைந்துள்ள வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் இராமநாதபுரம், விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்கள் ஆய்வுக்குழு ஆய்வாளராகிய நான் மற்றும் சிவகங்கை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப்பிரிவு காவல் ஆய்வாளர் திரு.ர.ஜேசுதாஸ் மற்றும் குழுவினருடன் திடீர் இணை சோதனை மேற்கொள்ளப்பட்டது. திடீர் சோதனையின்போது, அலுவலகத்திலிருந்த திருமதி.பழனியம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) மற்றும் கணிபொறி இயக்குனர்கள் திரு.காளிதாஸ் மற்றும் திரு.சீனிவாசன் ஆகியோரிடம் ஆய்வுக்குழுவினர் அறிமுகம் செய்துகொண்டு சோதனை மேற்கொள்ளப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருமதி.பழனியம்மாள் என்பவரிடம் பணம் ஏதும் இருக்கிறது என கேட்க அவரது கைபையிலிருந்து ரூ.500/-யை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டதற்கு,

தனது கைசெலவிற்கு கொண்டு வந்துள்ளதாக கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருமதி.பழனியம்மாள் என்பவரின் அறையிலிருந்த கணிபொறி இயக்குனர் திரு.K.சீனிவாசன் என்பவரை சோதனை செய்தபோது, அவரது சட்டை பையிலிருந்து ரூ.750/-யை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டதற்கு, தனது கைசெலவிற்கு கொண்டு வந்துள்ளதாக கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவர் வைத்திருந்த REALME அலைபேசியில் உள்ள 9600342454 என்ற அலைபேசி எண்ணின் UPI பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, கீழ்க்கண்ட ஊராட்சி செயலாளர்களிடமிருந்து பல்வேறு தேதிகளில் பணம் பெற்றுள்ளார் என்பது தெரிய வந்தது.

வ. எண்.	பெயர்	பரிவர்த்தனை காலம்	மொத்த பரிவர்த்தனை தொகை (ரூ).
01.	திருமதி.ஜான்சிராணி, ஊராட்சி செயலர், மறவமங்களம் ஊராட்சி.	2025-2026	ரூ.5,000/-
02.	திரு.செந்தில்வேல், ஊராட்சி செயலர், ஏரிவயல் ஊராட்சி.	2025-2026	ரூ.3,700/-
03.	திரு.முருகப்பன், ஊராட்சி செயலர், அதபடக்கி.	2025-2026	ரூ.2,150/-
04.	திரு.விஜயலெட்சுமி, ஊராட்சி செயலர், மல்லல்.	2025-2026 (தற்போது வரை)	ரூ.6,800/-
05.	திரு.சந்திரசேகர், ஊராட்சி செயலர், காடனேரி	ஜீலை - 2026	ரூ.1,000/-
06.	திருமதி.சித்ரா, ஊராட்சி செயலர், தென்மாவலி	ஜீலை - 2026 (தற்போது வரை)	ரூ.2,000/-
07.	திரு.பாலமுருகன், ஊராட்சி செயலர், அல்லூர்.	ஜீலை -ஆகஸ்ட் 2026	ரூ.2,500/-

08.	திருமதி.கலைச்செல்வி, ஊராட்சி செயலர், சொக்கநாதபுரம்.	ஜீலை - 2025 (தற்போது வரை)	ரூ.6,200/-
09.	திரு.ஆரோக்கியம், ஊராட்சி செயலர், புளியடிதம்பம்.	ஜீலை - 2026	ரூ.3,000/-
10.	திரு.கண்ணதாசன்,	2026	ரூ.2,200/-
	மொத்தம்		ரூ.34,550/-

எனவே, பணபரிவர்த்தனை விபரங்களை அவரது அலைபேசியில் இருந்து பதிவிறக்கம் செய்து, பிரிண்ட் எடுத்து, அதனை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருமதி.பழனியம்மாள் என்பவரின் அறையிலிருந்த கணிபொறி இயக்குனர் திரு.P.காளிதாஸ் என்பவரை சோதனை செய்தபோது, அவரது சட்டை பையிலிருந்து ரூ.270/-யை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டதற்கு, தனது கைசெலவிற்கு கொண்டு வந்துள்ளதாக கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவர் வைத்திருந்த VIVO அலைபேசியில் உள்ள 9943949345 என்ற அலைபேசி எண்ணின் UPI பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து பல்வேறு தேதிகளில் பணம் பெற்றுள்ளார் என்பது தெரிய வந்தது.

வ. எண்.	பெயர்	பரிவர்த்தனை காலம்	மொத்த பரிவர்த்தனை தொகை (ரூ).
01.	திருமதி.கலைச்செல்வி, ஊராட்சி செயலர், சொக்கநாதபுரம்.	2023 - 2026 (தற்போது வரை)	ரூ.7,900/-
02.	திரு.பாண்டியராஜன் ஊராட்சி செயலர், உடக்குளம்.	2026	ரூ.600/-
03.	திருமதி.டேவிட் புளோரா, கணிபொறி இயக்குனர், மாரந்தை ஊராட்சி.	2026	ரூ.4,000/-
04.	திரு.ஜவஹர்ராயன், ஊராட்சிமன்ற தலைவர், பருத்திகண்மாய்.	2023 - 2026	ரூ.8,500/-
05.	திரு.அங்குசாமி,	2025-2026	ரூ.6,800/-

	ஓட்டுநர், வட்டார வளர்ச்சி அலுவலர் அலுவலகம். காளையார்கோவில் ஒன்றியம்		
06.	திரு.பழனிக்குமார், கணிபொறி இயக்குநர், அம்மன்பட்டி ஊராட்சி.	2024-2026	ரூ.1,300/-
07.	திருமதி.பிரமிளா, கணிபொறி இயக்குநர், புளியடிதம்பம்.	06.08.2026	ரூ.2,000/-
08.	திரு.இராமநாதன், ஊராட்சி செயலர், ஊசிலங்குளம்,	2024-2026 (தற்போது வரை)	ரூ.2,300/-
09.	திரு.ஆரோக்கியம், ஊராட்சி செயலர், கொல்லங்குடி.	2025-2026 (தற்போது வரை)	ரூ.4,000/-
10.	திரு.இராதாகண்ணன், தனிநபர்	2025-2026	ரூ.13,000/-
11.	திரு.திருஞானசம்மந்தர், ஊராட்சி செயலர், சொக்கநாதபுரம்.	07.05.2026	ரூ.1,000/-
12.	திரு.பாலா, ஒப்பந்ததாரர், காளையார்கோவில்	2025-2026	ரூ.7,500/-
		மொத்தம்	ரூ.58,900/-

எனவே, பணபரிவர்த்தனை விபரங்களை அவரது அலைபேசியில் இருந்து பதிவிறக்கம் செய்து, பிரிண்ட் எடுத்து, அதனை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருமதி.பழனியம்மாள் என்பவரின் அறையிலிருந்த வேளாரேந்தல் ஊராட்சி செயலர் திருமதி.அழகம்மாள் என்பவரிடம் பணம் ஏதும் இருக்கிறதா என கேட்க அவரது கைபையிலிருந்து ரூ.250/-யை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டதற்கு, தனது கைசெலவிற்கு கொண்டு வந்துள்ளதாக கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருமதி.பழனியம்மாள் என்பவரின் அறைக்கு வெளியில் நின்று கொண்டிருந்த வட்டார வளர்ச்சி அலுவலரின் வாகன ஓட்டுநர் திரு.அங்குச்சாமி என்பவரை சோதனை செய்தபோது, அவரது சட்டை பையிலிருந்து ரூ.4000/-யை எடுத்து ஆஜர் செய்தார். எதற்காக அந்த கொண்டு வந்துள்ளீர்கள் என்று கேட்டதற்கு, சரியான முகாந்திரம் கூறாததால், விசாரணைக்காக

மேற்கண்ட பணம் கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருமதி.பழனியம்மாள் என்பவரின் அறையை சோதனை செய்தபோது, பணம் ஏதும் கைபற்றப்படவில்லை. இந்த திடீர் சோதனையின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அலுவலகத்தில் "B" பிரிவிலிருந்த பி-3 உதவியாளர் திரு.ஜெகதீஸ்குமார் என்பவரை சோதனை செய்தபோது, அவரது சட்டை பையிலிருந்து ரூ.310/-யை எடுத்து ஆஜர் செய்தார். அந்த பணம் குறித்து கேட்டதற்கு, தனது கைசெலவிற்கு கொண்டு வந்துள்ளதாக கூறியதால் அந்த பணம் அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் அவர் வைத்திருந்த VIVO Y 400 அலைபேசியில் உள்ள 8667312935 என்ற அலைபேசி எண்ணின் UPI பரிவர்த்தனைகளை ஆய்வு செய்தபோது, கீழ்க்கண்ட ஊராட்சி செயலாளர்களிடமிருந்து பல்வேறு தேதிகளில் பணம் பெற்றுள்ளார் என்பது தெரிய வந்தது. எனவே, பணபரிவர்த்தனை விபரங்களை அவரது அலைபேசியில் இருந்து பதிவிறக்கம் செய்து, பிரிண்ட் எடுத்து, அதனை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

வ. எண்.	பெயர்	பரிவர்த்தனை காலம்	மொத்த பரிவர்த்தனை தொகை (ரூ).
01.	திரு.பெனடிக்ட் மைக்கேல், ஊராட்சி செயலர், மரகாத்துார்.	08.08.2022	ரூ.10,000/-
02.	திரு.J.ஆரோக்கியம், ஊராட்சி செயலர், காட்டேந்தல் -சுக்கானுரணி.	12.03.2024	ரூ.2,000/-
03.	திரு.T.ஆரோக்கியம், ஊராட்சி செயலர், கொல்லங்குடி.	12.03.2026	ரூ.2000/-
		மொத்தம்	ரூ.14,000/-

இந்த திடீர் சோதனையின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அலுவலகத்தில் "B" பிரிவிலிருந்த பி-6 உதவியாளர் திரு.மா.பாலசங்கர் என்பவரை சோதனை செய்தபோது, அவரிடம் எந்த பணமும் இல்லை. இந்த திடீர் சோதனையின்போது, வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அலுவலகத்தில் "B" பிரிவிலிருந்த பி-4 இளநிலை உதவியாளர் திரு.நா.இளவரசன் என்பவரை சோதனை செய்தபோது, அவரிடம் எந்த பணமும் இல்லை. மேலும் வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அலுவலகத்தில் "B" பிரிவின் அறையை சோதனை செய்தபோது, பணம் ஏதும் கைப்பற்றப்படவில்லை. இந்த திடீர்

சோதனையின்போது 1) திருமதி.பழனியம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), 2) திரு.சீனிவாசன், கணிபொறி இயக்குநர், 3) திரு.காளிதாஸ், கணிபொறி இயக்குநர், 4) திரு.ஜெகதீஸ்குமார், உதவியாளர் மற்றும் 5) திரு.அங்குச்சாமி, வாகன ஓட்டுநர் ஆகியோரை நான் தனித்தனியாக விசாரித்து வாக்குமூலங்கள் பெறப்பட்டது. அலுவலகத்தில் B-பிரிவிற்குண்டான தினசரி வருகைப்பதிவேடுகள் - 3 விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதுசம்மந்தமாக திடீர் இணை சோதனை செயல்முறை நடவடிக்கை குறிப்புகள் 27.08.2026-ம் தேதி 15.15 மணிக்கு ஆரம்பிக்கப்பட்டு 22.00 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த திடீர் இணைச்சோதனையின்போது கைப்பற்றப்பட்ட பணம் ரூ.4000/-, ஆவணங்கள் மற்றும் வாக்குமூலங்கள் ஆகியவற்றை விசாரணைக்காக இத்துடன் ஒப்படைக்கிறேன். இந்த திடீர் சோதனை சம்மந்தமாக 1) திருமதி.பழனியம்மாள், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ), 2) திரு.சீனிவாசன், கணிபொறி இயக்குநர், 3) திரு.காளிதாஸ், கணிபொறி இயக்குநர், 4) திரு.ஜெகதீஸ்குமார், உதவியாளர் மற்றும் 5) திரு.அங்குச்சாமி, வாகன ஓட்டுநர் ஆகியோர் மீது உரிய நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். இணைப்பு மேற்கண்டவாறு. இப்படிக்கு ஒப்பம் S.முத்துராமலிங்கம்

Sir, Received the complaint on 28.08.2026 at 18.00 hrs. Found prima facie for the allegation of the complaint. Since, the matter is intimated to the SP/SR, V&AC, Chennai, obtained permission from the SP/SR, V&AC, Chennai and registered a case in Sivagangai V&AC Crime.No.12/2026 u/s 7, 7(A) of P.C Act, 1988, as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 and sec.106 BNSS 2023 on 28.08.2026 at 18.15 hrs. sd.R.Jesudoss, Inspector of Police, V&AC, Sivagangai.

இந்த வழக்கின் அசல் முதல் தகவல் அறிக்கை, புகார் மனு மற்றும் ஆய்வுழு ஆய்வாளரால் பெறப்பட்ட வாக்குமூலங்கள் ஆகியவற்றை கனம் முதன்மை மாவட்ட அமர்வு நீதிபதி, முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றம், சிவகங்கை அவர்களுக்கும், நகலை உயரதிகாரிகளுக்கும் அனுப்பி வைக்கிறேன்.

28/8/2026

Inspector of Police
Vigilance & Anti- Corruption
Sivagangai